# SMB பினான்ஸ் PLC

## முக்கிய விபரங்கள் ஆவணம்

SMB பினான்ஸ் PLC இன் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் தயாரிப்புக்களின்/சேவைகளின் முக்கிய அம்சங்களை இந்த ஆவணம் கொண்டுள்ளது. SMB பினான்ஸ் PLC இன் வருங்கால வாடிக்கையாளர்களுக்கு இந்த முக்கிய உண்மைகள் ஆவணம் கிடைக்கும். இது “நிதி வாடிக்கையாளர் பாதுகாப்புக் கட்டமைப்பு” என்ற தலைப்பில், 2018இன் 01ஆம் இலக்க நிதி குத்தகைச் சட்டத்தின் பணிப்புரையின் கீழ் வெளியிடப்பட்டு, www.smblk.com என்ற **கூட்டிணைக்கப்பட்ட** நிறுவன இணையதளத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

### 1.0 தயாரிப்புகள் மற்றும் சேவைகள் - கடன் வழங்கல்

நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு பின்வரும் தயாரிப்புகளையும் மற்றும் சேவைகளையும் வழங்குகிறோம்.

| தயாரிப்பு | அளவுகோல் | விவரணம் |
|---|---|---|
| **நிதி குத்தகை** | முக்கிய அம்சங்கள் மற்றும் தயாரிப்பின் தன்மை | ❖ சம்பளம் பெறும் ஊழியர்களுக்கும், வணிகத்தில் ஈடுபட்டுள்ள தனிநபர்களுக்கும், ஞஆநுகளுக்கும் மற்றும் **கூட்டிணைக்கப்பட்ட** நிறுவனங்களுக்கும் வழங்கப்படும் வசதிகள்.<br>❖ பதிவுசெய்யப்பட்ட/மறுசீரமைக்கப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்படாத வாகனங்கள், இயந்திராதிகள் (ஒரு விதிவிலக்கான அடிப்படையில்) ஆகியவற்றுக்கு குத்தகை விருப்புக்கள் வழங்கப்படுகின்றன. |
| | விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் | ❖ வயது - தனிநபர்களுக்கு 18 வயது முதல் 60 வயது வரை இருக்க வேண்டும்.<br>❖ அதிகபட்ச தவணைக்காலம் 7 ஆண்டுகள்.<br>❖ அடையாளச் சான்று - தேசிய அடையாள அட்டை (NIC)/வணிகப் பதிவு (BR)/படிவம் 1 அல்லது படிவம் 40/படிவம் 20/**அமைப்பகவிதிகள்**.<br>❖ வருமானச் சான்று - சான்றளிக்கப்பட்ட சம்பளச் சீட்டுக்கள் /மூலத்திலான அல்லது சான்றளிக்கப்பட்ட வங்கி அறிக்கைகள்/கணக்காயயப்பட்ட நிதிநிலை அறிக்கைகள்/வேறு வருமானச் சான்று ஆவணங்கள்.<br>❖ நிரந்தர வதிவிடச் சான்று - வணிகப் பதிவு/படிவம் 13 (**கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள்**)/பயன்பாட்டுச் சிட்டை/கிராம சேவகர் சான்றிதழ் (தனிநபர்கள்).<br>❖ இரண்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய உத்தரவாதமளிப்போர் - அடையாளச் சான்று/பட்டியலிடல் சான்று/வருமானச் சான்று போன்ற விபரங்கள்.<br>❖ RMV பதிவுக்குத் தேவையான ஆவணங்களுடன் வாகன விபரங்கள் வழங்கப்பட வேண்டும்.<br>❖ சகல முன்மொழியப்பட்ட வசதிகளும் குத்தகைதாரர்களினதும் மற்றும் உத்தரவாததாரர்களினதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஊசுஐடீ அறிக்கைகளுடன் ஆதரிக்கப்பட வேண்டும் என்பதுடன், கிரமமான நிலையிலும் இருக்க வேண்டும்.<br>❖ பதிவுசெய்யப்பட்ட/மறுசீரமைக்கப்பட்ட வாகனங்களுக்கு - இலங்கை குத்தகைச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட ஓர் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளரிடமிருந்து வாகன மதிப்பீடு பெறப்பட வேண்டும்.<br>❖ புத்தம் புதிய வாகனங்களுக்கு - இலங்கையில் உள்ள ஒரு முகவரிடமிருந்து வாங்கு பொருள் விலைப்பட்டியல்.<br>❖ வாடிக்கையாளரின் திருப்பிச் செலுத்தும் திறனை அடிப்படையாக வெளிப்பாடு வரம்பு கொண்டதுடன், இது |

| | | |
|---|---|---|
| | | அவ்வப்போது CBSLஆல் பரிந்துரைக்கப்படும் மதிப்பு விகிதத்திற்கான கடனை (LTV) மீறாமல் இருக்கும்.<br>❖ தொடர்புடைய சகல அபாயங்களுக்கும் எதிராக சொத்து விரிவாக காப்பீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன், SMBFக்கு ஆதரவாக காப்பீடு குறித்தொதுக்கப்படவும் வேண்டும்.<br>❖ முதன்மை ஒப்பந்தம் மற்றும் மேலதிக விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆவணத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேறு பொதுவான நிபந்தனைகள். |
| விரைவான பணக் கடன் | முக்கிய அம்சங்கள் மற்றும் தயாரிப்பின் தன்மை | ❖ சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கும;/அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை ஊழியர்களுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>❖ சம்பளம் பெறும் ஊழியர் **ஒருவரின்** பல்வேறு தனிப்பட்ட தேவைகளை நிறைவேற்ற நிதிநிலை உதவி வழங்கப்படுகிறது. |
| | விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் | ❖ வயது - அரசாங்க ஊழியர்கள் 18 வயது முதல் 60 வயதுக்கு இடையிலும், தனியார் துறை ஊழியர்கள் 18 வயது முதல் 55 வயதுக்கு இடையிலும் இருக்க வேண்டும்.<br>❖ அதிகபட்ச கடன் தொகை மாதாந்த அடிப்படைச் சம்பளத்தினதும் மற்றும் நிலையான **கொடுப்பனவுகளின்** 10 மடங்கு<br>❖ ஒரு மாதத்திற்கு ரூ. 15,000/- குறைந்தபட்ச சம்பளம் (அடிப்படை சம்பளம் + நிலையான **கொடுப்பனவுகள்**)<br>❖ அதிகபட்ச தவணைக்காலம் 4 ஆண்டுகள்.<br>❖ அடையாளச் சான்று - தேசிய அடையாள அட்டை (NIC)<br>❖ வருமானச் சான்று - சான்றளிக்கப்பட்ட **சமீபத்திய** மூன்று மாதச் சம்பளச் சீட்டுக்கள் /மூலத்திலான அல்லது சான்றளிக்கப்பட்ட வங்கி அறிக்கைகள;/வேறு வருமானச் சான்று ஆவணங்கள்.<br>❖ நிரந்தர வதிவிடச் சான்று - பயன்பாட்டு சிட்டை/கிராம சேவகர் சான்றிதழ்<br>❖ இரண்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய உத்தரவாதமளிப்போர் - அடையாளச் சான்று/பட்டியலிடல் சான்று/வருமானச் சான்று போன்ற விபரங்கள்.<br>❖ ஓராண்டு கால சேவை முடித்த ஒரு நிரந்தர ஊழியராக இருக்க வேண்டும்<br>❖ மொத்தக் **கழிப்பனவுகள்** மாதச் சம்பளத்தில் 60%க்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.<br>❖ சகல முன்மொழியப்பட்ட வசதிகளும் **கடன் பெறுனர்களதும்** மற்றும் உத்தரவாததாரர்களினதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஊசுஐடீ அறிக்கைகளுடன் ஆதரிக்கப்பட வேண்டும் என்பதுடன், கிரமமான நிலையிலும் இருக்க வேண்டும்.<br>❖ மாதாந்தக் கடன் தவணையை **சம்பளத்திலிருந்து** கழிக்க தொழில் வழங்குனரிடமிருந்து பொறுப்பேற்புக் கடிதம்<br>❖ முனைவுக் கடிதம், வசதி ஒப்பந்தப் படிவம் மற்றும் மேலதிக விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆவணம் ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேறு பொதுவான நிபந்தனைகள். |
| தவணைக் கடன்கள் | முக்கிய அம்சங்கள் மற்றும் தயாரிப்பின் தன்மை | ❖ வணிகங்களின் செயல்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது மூலதனச் சொத்துக்களை வாங்குவதற்கும் மற்றும் தனிநபர்களின் தனிப்பட்ட நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் அறிமுகப்படுத்தப்பட்டது.<br>❖ பிணையாக ஆதனத்தை, வாகனத்தை மற்றும் தனிப்பட்ட |

| | | |
|---|---|---|
| | | உத்தரவாதமளிப்போர்களை வழங்கலாம். கடன் ஆபத்து காரணிகளின் மீதான அடிப்படையில், வசதியை அங்கீகரிக்கும் **அதிகாரம் உடையோரால்** பெறுமதியும் மற்றும் பிணையின் வகையும் தீர்மானிக்கப்படும். |
| | விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் | ❖ வயது - தனிநபர்களுக்கு 18 வயது முதல் 60 வயது வரை இருக்க வேண்டும்.<br>❖ அதிகபட்ச தவணைக்காலம் 5 ஆண்டுகள்.<br>❖ அடையாளச் சான்று - தேசிய அடையாள அட்டை (NIC)/வணிகப் பதிவு (BR)/படிவம் 1 அல்லது படிவம் 40/படிவம் 20/ **அமைப்பக விதிகள்**.<br>❖ வருமானச் சான்று - சான்றளிக்கப்பட்ட சம்பளச் சீட்டுக்கள் /மூலத்திலான அல்லது சான்றளிக்கப்பட்ட வங்கி அறிக்கைகள்/கணக்காயயப்பட்ட நிதிநிலை அறிக்கைகள்/வேறு வருமானச் சான்று ஆவணங்கள்.<br>❖ நிரந்தர வதிவிடச் சான்று - வணிகப் பதிவு/படிவம் 13 **கூட்டிணைக்கப்பட்ட நிறுவனங்கள்**)/பயன்பாட்டு சிட்டை/கிராம சேவகர் சான்றிதழ் (தனிநபர்கள்).<br>❖ இரண்டு ஏற்றுக்கொள்ளக்கூடிய உத்தரவாதமளிப்போர் - அடையாளச் சான்று/பட்டியலிடல் சான்று/வருமானச் சான்று போன்ற விவரங்கள்.<br>❖ அடமானக் கடன்களுக்கான ஆதனம் தொடர்பான பிணை ஆவணங்கள்.<br>❖ சகல முன்மொழியப்பட்ட வசதிகளும் குத்தகைதாரர்களினதும் மற்றும் உத்தரவாததாரர்களினதும் ஊசுஐடீ அறிக்கைகளுடன் ஆதரிக்கப்பட வேண்டும் என்பதுடன், கிரமமான நிலையிலும் இருக்க வேண்டும்.<br>❖ அசையா ஆதனங்கள் மீதான அடமானத்திற்கான வெளிப்பாட்டு வரம்பு கட்டாய விற்பனை மதிப்பில் 70% வரை இருக்கும்.<br>❖ மோட்டார் வாகனங்கள் மீதான அடமானங்களுக்கான வெளிப்பாட்டு வரம்பு வாடிக்கையாளரின் திருப்பிச் செலுத்தும் திறனை அடிப்படையாகக் கொண்டதுடன், அவ்வப்போது CBSLஆல் பரிந்துரைக்கப்படும் கடன் மதிப்பு விகிதத்தை (LTV) மீறாமல் இருக்கும். மேலதிகமாக, கடன் சேவை காப்பு விகிதம் மாத வருமானத்தை விட 1.25 மடங்கு இருக்க வேண்டும்.<br>❖ பதிவுசெய்யப்பட்ட வாகனங்களுக்கு - இலங்கை குத்தகைச் சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட ஓர் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீடு பெறப்பட வேண்டும்.<br>❖ பதிவுசெய்யப்படாத வாகனங்களுக்கு - இலங்கையில் உள்ள ஒரு முகவரிடமிருந்து வாங்கு பொருள் விலைப்பட்டியல்.<br>❖ அசையா ஆதனங்களுக்கு - CBSLஇனால் குறித்துரைக்கப்பட்டுள்ள அளவுகோல்களுக்குள் ஒரு தொழில்முறை மதிப்பீட்டாளரிடமிருந்து மதிப்பீடு பெறப்பட வேண்டும்.<br>❖ வாகனங்களுக்கு மற்றும் நிலத்தில் உள்ள கட்டிடம் கருத்தில் கொள்ளப்பட்டால், தொடர்புடைய சகல அபாயங்களுக்கும் எதிராக சொத்து விரிவான காப்பீடு செய்யப்பட வேண்டும் என்பதுடன், ளுஆடீகுக்கு ஆதரவாக காப்பீடு குறித்தொதுக்கப்படவும் வேண்டும்.<br>❖ முனைவுக் கடிதம், **வசதி** ஒப்பந்தப் படிவம் மற்றும் மேலதிக விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆவணம் ஆகியவற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ள வேறு பொதுவான நிபந்தனைகள். |

## 2.0 வட்டி விகிதம் மற்றும் அபராதம், கட்டணங்கள், கட்டணம் மற்றும் தரகுக்கூலி

- ❖ வாடிக்கையாளரின் கடன் ஆபத்து மற்றும் கட்டணத் தாளில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிகக் கட்டண விகிதங்களின் அடிப்படையில் பயனுள்ள வட்டி விகிதம் மாறுபடும் என்பதுடன், இது அவ்வப்போது ALCOஆல் தீர்மானிக்கப்படுகிறது. இந்த விகிதங்கள் வருங்கால வாடிக்கையாளர்களுக்கு கோரிக்கையின் பேரில் கிடைக்கும்.
- ❖ தயாரிப்பு வகைக்கு ஏற்ப, கடன் வழங்கும் வசதிகளுக்கு பின்வரும் கட்டணங்கள் ஏற்புடையதாகும்
  - CRIB கட்டணங்கள்
  - முத்திரைத் தீர்வை
  - சோதித்தல்/வருகைதரல் கட்டணங்கள்
  - சொத்து அடமானத்திற்கு பிரயோகிக்கத்தக்க சட்டக் கட்டணங்கள்
  - செய்முறைப்படுத்தல் கட்டணங்கள்
  - மதிப்பீட்டுக் கட்டணங்கள்
  - காப்பீட்டுத் தவணைக் கட்டணம்
  - சொத்து கைமாற்றக் கட்டணம் - RMV கட்டணங்கள்

- ❖ சம்பந்தப்பட்ட அதிகாரபீடத்தினால் நிர்ணயிக்கப்பட்ட முத்திரைத் கட்டணம், CRIB மற்றும் RMV கட்டணங்கள்.
- ❖ பொருந்தக்கூடிய குத்தகைக்கு/கடன்களுக்கு பொருந்தக்கூடிய அரசாங்க வரி மற்றும் சகல வேறு சட்டரீதியான செலவுகள்/கட்டணங்கள்

## 3.0 தயாரிப்புகளையும் மற்றும் சேவைகளையும் பெறுவதற்கான நடைமுறை

சாத்தியமான சகல வாடிக்கையாளர்களும் எங்கள் தலைமை அலுவலகத்திற்கு அல்லது அருகிலுள்ள கிளைக்குச் சென்று அவர்களின் நிதித் தேவைகள் குறித்து எங்கள் விற்பனைக் குழாமுடன் கலந்துரையாடுவதற்கு அழைக்கப்படுகிறார்கள். கலந்துரையாடலுக்குப் பின்னர், எங்கள் தயாரிப்புகளுக்கும் மற்றும் சேவைகளுக்கும் விண்ணப்பிக்கக்கூடிய வாடிக்கையாளர்களுக்கான விண்ணப்பப் படிவத்தை நிறுவனம் வழங்கும். விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேறு தேவையான ஆவணங்களுடன் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் பெறப்பட்டதும், வாடிக்கையாளர் கோரும் தயாரிப்பின் அல்லது சேவையின் வகையைப் பொறுத்து, அது செயலாக்கப்பட்டு, மதிப்பீடு செய்யப்படும்.

பிணை/சட்ட ஆவணங்கள் மற்றும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியன நிறைவேற்றப்பட்டவுடன், நிறுவன ஒப்புதலும் மற்றும் பணங்கொடுத்தலும் செய்யப்படும்.

## 4.0 ஏற்புடையதாகும் சட்ட ஏற்பாடுகள்

- ❖ நுகர்வோர் கடன் சட்டம் (1982இன் இல. 29) மற்றும் சட்டத்திற்கான சகல திருத்தங்கள்
- ❖ நிதிக் **குத்தகைக்கு விடுதல்** சட்டம் (2000இன் இல.56) மற்றும் சட்டத்திற்கான சகல திருத்தங்கள்
- ❖ **குடியியல்** நடைமுறைக் சட்டக்கோவை மற்றும் சகல திருத்தங்கள்
- ❖ 1949இன் 6ஆம் இலக்க ஈடு சட்டம்:

## 5.0 வாடிக்கையாளர் முறைப்பாடுகளைத் தீர்ப்பதற்கான நடைமுறை

SMB பினான்ஸ் PLCஇல் உள்ள நாங்கள், நன்கு பயிற்சி பெற்றதும் மற்றும் திறமையானதுமான பணியாளர்கள் மூலம் முறையானதும் மற்றும் பயனுள்ளதுமான செயல்முறையைப் பயன்படுத்தி, எங்கள் வாடிக்கையாளர்களுக்கு போட்டிக்குரிய வட்டி விகிதங்கள், உடனடிச் சேவை மற்றும் வசதி ஆகியவற்றால் பூர்த்தி செய்யப்பப்பட்ட விருப்பமான நிதிநிலைத் தீர்வுகளை வழங்க உறுதிபூண்டுள்ளோம். எவ்வாறாயினும், உங்களுக்கு வழங்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட சேவைக்கு எதிராக நீங்கள் திருப்தியடையவில்லையென உங்களுக்கு முறைப்பாடொன்று இருந்தால், அதை ஒன்றில் கடிதமொன்றின் அமைப்பில் எழுத்தில் மின்னஞ்சல், தொலைநகல் அல்லது இணையதளம் மீது அல்லது வாய்மொழியாக தொலைபேசி மூலம்/பின்வரும் அலுவலகத்திற்கு செல்வதன் மூலம் அல்லது சகல கிளைகளிலும் கிடைக்கும் CFF (வாடிக்கையாளர் பின்னூட்டல் படிவம்) பூர்த்தி செய்வதன் மூலம் செய்ய முடியும்.

திரு நைஜல் விஜேசிங்க
கடன் தலைவர்
இல: 282/1, CBS கட்டிடம்,
காலி வீதி,
கொழும்பு 03
தொலைபேசி - 0114 222 830 தொலைநகல் இல. - 0112 574 330
மின்னஞ்சல் - nigelw@smblk.com
இணையதளம் - www.smblk.com

மேற்கண்ட அதிகாரியினால் பெறப்படும் முறைப்பாடுகள் 5 வேலை நாட்களுக்குள் ஏற்றுக்கொள்ளப்படுவதுடன், 21 நாட்காட்டி நாட்களுக்குள் அத்தகைய முறைப்பாடு தீர்க்கப்படும். SMB பினான்ஸ் PLCஆல் 21 நாட்காட்டி நாட்களுக்குள் முறைப்பாட்டைத் தீர்க்க முடியாவிட்டால், அதற்கு அதிகபட்சம் மூன்று மாதங்கள் எடுக்கும் என்பதுடன், நீடிப்புக் காலத்திற்கான காரணங்களைத் தொடர்பான அதிகாரி தெரிவித்து, இதுவரை விடயத்தைத் தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை உங்களுக்கு அறிவிப்பார்.

அத்தகைய தீர்மானம் உங்கள் எதிர்பார்ப்புக்கு ஏற்றதாக இல்லாவிட்டால் அல்லது குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நீங்கள் எழுப்பிய பிரச்சனை தீர்க்கப்படாவிட்டால், உங்கள் முறைப்பாட்டை எடுத்துச் செல்ல ஒரு சுயாதீன நிதிநிலை குறைகேள் அதிகாரியின் சேவைகள் உள்ளன. மேலும் விபரங்களுக்கு தயவு செய்து நீங்கள் தொடர்பு கொள்ளும் அலுவலகத்தில் உள்ள அலுவலர் ஒருவரைக் கேளுங்கள் அல்லது குறைகேள் அதிகாரியின் அலுவலகத்தை நேரடியாகத் தொடர்பு கொள்ளுங்கள். தொடர்பு விபரங்கள் வருமாறு:

நிதிநிலை குறைகேள் அதிகாரி
இல. 143/யு, வஜிரா வீதி
கொழும்பு 05
தொலைபேசி - 0112 595 624 தொலைநகல் எண் - 0112 295 625
மின்னஞ்சல் - fosril@sltnet.lk
இணையதளம் - www.financialombudsman.lk

ளுஆடீ பினான்ஸ; PLCஇல் நாங்கள் வழங்கும் எங்கள் தயாரிப்புகளையும் மற்றும் சேவைகளையும் பற்றி விசாரிக்க பின்வரும் தளங்களைப் பயன்படுத்தலாம்:

- எங்களை அழைக்க:¸94 114 222 888
- எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்ப: info@smblk.com
- இணையதளம்: www.smblk.com
- எங்களிடம் வருகைதர: தலைமை அலுவலகம், SMB பினான்ஸ் PLC, இல. 282/1, CBS கட்டிடம், காலி வீதி, கொழும்பு 03, இலங்கை.
- வார நாட்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை எந்த SMB பினான்ஸ் PLC கிளைக்கும் நீங்கள் செல்லலாம்.

...............................................
வாடிக்கையாளரின் கையொப்பம்
திகதி: